வகையிலே ஒரு தவறான பிரச்சாரம் நாட்டு மக்கள் மத்தியில் கிளப்பப்படுவது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அந்தத் தவறான பிரச்சாரத்தை போக்க அரசு செய்த சாதனைகளை விளக்கி மக்கள் மத்தியிலே விளம்பரப்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லாத கேள்வி. ஆனால் அப்–டு–டேட் அதாவது பிப்ரவரி மாதம் 9-ஆம் தேதி வரையில் என்ன செய்திருக்கிறோம் என்பதற்கு தனிக் கேள்வி கேட்டால் நான் விரிவான மிக விவரமான பதிலைச் சொல்லத் தயாராகக் காத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியினுடைய குடிநீர் பிரச்சினையைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்தார்கள். குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின் கச்சேரி நடத்தப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். எனவே மீண்டும் அதுபோன்ற கச்சேரிகளை புழலேரியில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமை தாங்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே' கச்சேரி நடத்தப்பட்டது உண்மை. நான் போய் இருந்தது உண்மை. ஆனால் இது ஒரு ஜனநாயக நாடு. இங்கே தனிப்பட்ட கொள்கையினை யார் மீதும் திணிக்கக்கூடாது. பொதுவாக மக்கள் விரும்பி ஒரு கச்சேரிக்கு ஏற்பாடு செய்தால் அவற்றில் அமைச்சர்கள் போய் கலந்துகொள்வதுதான் தமிழகத்தின் பண்பாடு. நீங்கள் நாத்திகர்கள். you are an atheist. ஆனால் கட்சியில் சேருபவர்கள் எல்லாம், அனுதாபிகள் எல்லாம அப்படித்தான் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துவதில்லை. அப்படி ஒரு சிறந்த கொள்கையைக் கொண்டிருக்கிறீர்கள். நாங்களும் அதைத்தான் கையாண்டுகொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 200, 201, 202 ஆகியவை மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க த ளி வைக்கப்பெறுகின்றன.

தமிழ்நாட்டில் இயங்கி வரு விசைத்தறிகள்.

*வினா எண். 203—திரு. குமரிஅனந்தன்; மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதியதாக விசைத்தறி அமைக்க உரிமை வழங்குவது முழுமையாக தடை செய்யப்படுமா?

(ஆ) இப்போது எவ்வளவு விசைத்தறிகள் இயங்குகின்றன?

(1983 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) புதிதாக விசைத் தறிகளை நிறுவ அனுமதி வழங்குவது மத்திய அரசின் அதிகாரத் திற்கு உட்பட்டதாகும். மத்திய அரசு புதிதாக விசைத்தறி நிறுவுவதைத் தடை செய்திருந்தது. தற்பொழுது மத்திய அரசு விசைத்தறிகளை 5 சதவீத அளவிற்கு கூட்டுறவுத் துறையில் மட்டுமே விஸ்தரிப்பதென கொள்கையளவில் முடிவெடுத்துள்ளது.

(ஆ) தமிழ்நாட்டில் 31–12–81 அன்றைய தேதியில் மொத்தம் 85,909 விசைத்தறிகள் உரிமத்துடன் இயங்கி வந்தன. இந்த ஆண்டு புதிதாக 200 விசைத்தறிகளை மத்திய அரசு வழங்கி இருக்கின்றது. 14 இடங்களில் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு இது வழங்கப்பட்டு இருக்கின்றது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, மிக வேகமாக விசைத்தறிகள் வருவது பற்றிப் பேசுகின்றபோது அதை நாம் தடுக்க முடியாது. ஆனால் இதனால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது பற்றி அரசு ஆராய்ச்சி செய்ததா? அதுபற்றி முடிவு எடுத்ததா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். உரிமம் வழங்குகின்ற அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கின்றது என்று. அவர்கள் 5 சதவீத அளவுக்கு அனுமதி வழங்குவதாக முடிவெடுத் திருக்கிறார்கள். அப்படி வழங்கப்படுகிற அனுமதி கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுத்தான் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. கைத்தறி நெசவாளர்கள்பாதிக்கப்படக்கூடாதுஎன்பதற்காகத்தான்கைத்தறி நெசவாளர்கள் எந்தெந்த ரகங்களை உற்பத்தி செய்யவேண்டும், விசைத்தறி எந்தெந்த ரகங்களை உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்கு விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை மீறுகின்ற விசைத்தறியாளர்கள் மீது வழக்கு தொடரவோ அபராதம் விதிக்கவோ வழிமுறைகள் சட்டத்திலே இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, நான் கேட்க இருந்த கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறி விட்டார்கள். ஆனால் கைத்தறிக்கு என்று ஒதுக்கப்படுகின்ற ரகங்ளை விசைத்தறியிலே உற்பத்தி செய்கிறார்கள், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். கைத்தறிக் காக ஒதுக்கி இருக்கின்ற ரகங்களை விசைத்தறி நெசவாளர்கள் தயாரித்தால் அவர்களுடைய உரிமங்கள் ரத்து செய்யப்படவும், அவர்கள் மீது நீதிமன்றங்களில் வழக்கு தொடரவும், அபராதம் விதிக்கவும், சிறைக்கு அனுப்பவும் பல்வேறுவிதமான வழிமுறைகள்

சட்டத்திலே இருக்கின்றன. அப்படி வசதிகள் இருப்பதால் யாராவது மீறினால் அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அதிகபேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடியது கைத்தறித் தொழில். இப்போது விசைத்தறியில் தயாரிக்கக்கூடிய துணிகளை கைத்தறி துணி என்று சீல் போட்டு விற்கக்கூடிய ஒரு அபாயம் இருக்கிறது. ஆகவே இன்னின்ன ரகங்களைத்தான் விசைத்தறி உற்பத்தி செய்யவேண்டும் என்று திட்டவட்டமாக அரசு முடிவு எடுக்குமா அல்லது விசைத்தறிகள் ஓரளவுக்குத்தான் தமிழ்நாட்டில் அமுலில் இருக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த அரசுக்கு எண்ணம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; ஏற்கனவே நான் சொன்னேன், விசைத்தறிகள் இன்னின்ன ரகங்களைத் தயார் செய்ய வேண்டும், கைத்தறி இன்னின்ன ரகங்களைத் தயார் செய்யவேண்டும் என்று மிக தெளிவாக மத்திய அரசால் விதிகள் மூலமாக வரையறுக்கப் பட்டிருக்கிறது.

*வினா எண்.204—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைத்தறிகளை குறைக்க வேண்டுமென்ற நெசவாளர்களின் நீண்ட நாளைய கோரிக்கையை அரசு ஏற்று நடைமுறைப் படுத்துமா?

(ஆ) அனுமதியில்லாத விசைத்தறிகளை உடன் ஒழிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) விசைத்தறிகள் நிறுவிட, உரிமங்கள் வழங்குவது மத்திய அரசினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பின் மத்திய அரசால் மாநிலங்களுக்கு புதிய விசைத்தறிகள் ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஆனால் தற்பொழுது மத்திய அரசு புதிய விசைத்தறிகளை 5 சதவீத அளவிற்கு கூட்டுறவுத் துறையில் மட்டும் விஸ்தரிப்பதென கொள்கை அளவில் முடிவு எடுத்துள்ளது.

(ஆ) நாட்டில் அங்கீகரிக்கப்படாத விசைத்தறிகள் பெருகி விட்டபடியால் அவற்றை முறைப்படுத்தி உரிமம் வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி 31-3-81 அன்றைய தேதியில் உரிமம் இல்லாமல் இயங்கி வந்த விசைத்தறிகளை அங்கீகரிக்கும் பொருட்டு முறையாக விண்ணப்பிக்கப்பட்ட விசைத்தறிகளுக்கு சென்னையிலுள்ள மத்திய அரசின் துணிநூல் ஆணையர் அலுவலகம் உரிமம் வழங்கிவருகிறது. எனவே